இணைப்பு I.

[248-ம் பக்கத்தில் 396 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட விடையைக் காணக.]

தமிழ்நாட்டில் தற்போதுள்ள பட்ட மேற்படிப்பு வசதிகள் இருப்பதைக் கொண்டும், உடற்கூறு இயல், சிசுநோய் இயல், மேகநோய் இயல், கதிரியக்க நூல், மகப்பேறு இயல், முதலியவை போன்ற பாடப்படிப்பு காரில் தரம் உயர்ந்த துறைகள் பல இருப்பதன் காரணமாகவும் இம் மாநிலம் மருத்துவ பட்ட மேற்படிப்புக் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்ற சிரான நிலையம் இருப்பதாகக் கருதப்பட்டுள்ளது. இத்தகைய வாயில் களையும், அவற்றைக் கொண்டு பெற்ற அனுபவத்தையும் வைத்து, இம் மாநிலத்தில் மருத்துவம், அறுவை மருத்துவம் இவற்றில், உயர்ந்த துறைகளிலும் மிகவும் மேலான துறைகளிலும் பட்டமேற்படிப்பு வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

2. அடிப்படை மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் கீழ்க் காணும் ஆசிரியர்களைக் கொண்டு 1—3—1968-ல் சென்னைப் பல்கலைக் கழகத்தால் தொடங்கப்பட்டது.

உயிர் வேதியியல் துறை :

துணைப் பேராசிரியர் (Reader) ஒருவர்,

விரிவுரையாளர் இருவர்.

உட்சுரப்பி இயல்துறை :

துணைப்பேராசிரியர் ஒருவர்

விரிவுரையாளர் ஒருவர்.

மரபியல் துறை :

விரிவுரையாளர் ஒருவர்.

3. அடிப்படை மருத்துவ அறிவியல், பட்ட மேற்படிப்பு நிறுவனம் ஒன்றைப் பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதற்காக, 1965-66 ஆம் ஆண்டி லிருந்து நான்காண்டு காலத்திற்கு ரூபாய் 12·50 லட்சத்திற்கு மேற் படாத தொடரா இன மானியமும், ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒரு லட்சம் தொடர் மானியமும், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்க அரசு அனுமதி அளித்தது.

4. மேற்சொன்ன நிறுவனத்தை ஏற்படுத்துவதற்காக சென்னைப் பல்கலைக்கழகத்திற்குத் தொடரா இன மானியமாக ரூ. 183,33,3-ஆம் தொடர் மானியமாக ரூபாய் 14,550-ம் வழங்கப்படுவதற்கு 1965-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அரசு அனுமதியளித்தது. இந்த நிறுவனத் தின் தொடர் செலவுக்காக ரூபாய் ஒரு லட்சம் மானியமாக 1967-ஆம்

ஆண்டு மார்ச்சுத் திங்களில் அனுமதியளிக்கப்பட்டது. 1968 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் தொடரா மானியமாக ரூபாய் 1·5 லட்சமும் தொடர் மானியமாக ரூபாய் ஒரு லட்சமும் மேற்சொன்ன நிறுவனத்தை ஏற்படுத்துவதற்காக அரசு அனுமதித்தது.

5. சென்னைப் பல்கலைக் கழகம் அடிப்படை மருத்துவ இயலில் பட்ட மேற்படிப்பு நிறுவனம் ஏற்படுத்தும் திட்டம் குறித்து, 1969 ஆம் ஆண்டிலும் இவ்வரசு சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு இவ்வரசு செலவுக்கு ரூ. 1 லட்சமும், தொடரா இனச் செலவுக்கு ரூ. 9,16,567-ம் வழங்க ஒப்புதலளித்தது.

6. அடிப்படை மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் 1968-ல் தொடங்கிய நாளிலிருந்து கல்வி கற்பிக்கும் பணியைத் தவிர, கீழ்க்கண்ட ஆராய்சிப்ப் பணிகளையும் மேற்கொண்டுள்ளது.

உயிர் வேதியியல் துறை:—

(i) சிறுநீரகத்திலும், சிறுநீரகப் பாதையிலும் கற்கள் தங்குவது பற்றிய உயிர் வேதியியல் ஆராய்ச்சி ;

(ii) சிறுநீரகப் பாதையில் ஏற்படும் புற்றுநோய் ஆய்வுகள் ;

(iii) (தொழிற்சாலைகளில், இயந்திர அறையில் அல்லது கோடை வெயிலில்) மிக உயர்ந்த தட்பவெப்ப நிலைகளிலும் தொற்றுநோய் காய்ச்சல் பரவியுள்ள காலங்களிலும் வேலைசெய்யும் ஒவ்வொருவரது உடற் கூறிலும் ஏற்படும் விளைவுகளை அறிந்துகொள்வதற்காக திசுக்களுக்கும், ஒருயிர் அணுக்களுக்கும் பல்லுயிர் அணுக்களுக்கும் தட்ப வெட்பத்தால் ஏற்படும் விளைவுகளை ஆராய்தல்.

IV. இன்னும் சில திட்டங்கள் பின்வருமாறு :—

(i) முதிர்ந்த அல்லது மிகக் கடுமையான நீரிழிவு நோயினால் காணப் படும் சிக்கல்கள் பற்றி ஆராய்தல்.

(ii) மனநோய் காரணமாகவும் உடல்நோய் காரணமாகவும் ஏற்படும் நிண நீர் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகள்.

(iii) ஊட்டம் குறைந்த சிறுவர்களிடையே காணப்படும் (தவளைச் சொறிநோய்) "ஃபைனோ டர்மா" என்னும் நோய் பற்றிய ஆராய்ச்சிகள் ;

(iv) "கிறிஸ்டலூரியா"வில் ஏற்றத்தாழ்வு கூறுபற்றிய ஆராய்ச்சி.

உட்சுரப்பி இயல்துறை:

இந்தத் துறையின் ஆராய்ச்சித் திட்டங்கள் கீழே சொல்லியவாறு முக்கியமாகப் பிரிக்கப்படுகின்றன—

(i) மருத்துவ உட்சுரப்பி இயலும், பல்வேறு திட்டக் கூறுகள் அமைந்த உட்சுரப்பியும் ;

(ii) உயிர் வேதியியல், செய்முறை உட்சுரப்பியல் ;

(iii) உருவக உட்சுரப்பி இயல்.

1974 மார்ச் 13]

மாபியல் துறை :

ஆராய்ச்சித் திட்டங்களைத் தவிர இத்துறை மரபியல் நோய்களைக் கண்டறியும் பணியையும் நடத்தி வருகிறது. மரபியல் நோய்கள் தொடங்கும் முன்னரே அவற்றை மேலும் மேலும் கண்டறிந்து கட்டுப் படுத்துவதற்கான முறைகளிலும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இழுப்பு நோய்த் தடுப்பு மருந்து, வாதநோய்த் தடுப்பு மருந்து போல மானிடர்க்கு ஏற்படும் பல்வேறு நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் மருந்து களின் மரபியலைக் கண்டறியும் ஆராய்ச்சிப் பணிக்கும் நடைபெற்று வருகின்றது. இவற்றுடன் மரபியல் சம்பந்தப்பட்ட ஆலோசனைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

இணைப்பு II.

[249-ம் பக்கத்தில் 397-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) இல்லை. அப்பணி நடந்தேறி வருகிறது.

(இ) ஆலந்தூர் நகரம் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அந்த மண்டலங்களில் நடந்தேறி வரும் குடிநீர் வழங்கு நீர்த்தேக்கப்பணியின் (Service Reservoir Work) முன்னேற்றம் வருமாறு :

மண்டலம் 1.

குடிநீர் வழங்கு நீர்த்தேக்கம் கட்டுவதற்கான இடத்தை நகராட்சி இன்னும் ஒப்படைக்கவில்லை. இதற்காக முதலில் தெரிந்தெடுக்கப்பட்ட இடத்தினை அனுமதி பெறாத நபர்கள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதால், இது குறித்து வழக்கு ஒன்று பூவிருந்தவல்லி ஊராட்சி நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வருகிறது. முதலில் ஒதுக்கிய மனைக்கு எதிர்புறத்தி லுள்ள நிலத்தை குடிநீர்த்தேக்கம் கட்டுவதற்காக ஒப்படைக்குமாறு நகராட்சி கேட்கப்பட்டுள்ளது. இது குறித்து நகராட்சி அதிகாரிகளுடன் கடிதத் தொடர்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்டலம் II-A.

குடிநீர்த்தேக்கம் எல்லா வகைகளிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மண்டலம் II-B.

குடிநீர்த்தேக்கம் எல்லா வகைகளிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மண்டலம் III-A.

குடிநீர்த்தேக்கம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. குழாய் இணைப்புப் பணியும் (சோதனைப் பணியும்) நடந்தேறி வருகின்றன.